திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தமிழ் நாட்டில் இருக்கிற பள்ளிக் கூடங்களில் பல இடங்களில் அறிவியல் ஆய்வுக் கூடங்கள் இல்லாமல் இருக்கின்றன. இந்தக் குறையைப் போக்க அரசாங்கம் ஏதாவது நடவடிக்கை எடுக்குமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, உயர்நிலைப் பள்ளிகளைப் பொறுத்த வரையில் இது வரையில் 810 உயர் நிலைப் பள்ளிகளுக்கு அறிவியல் சாதனங்கள் வாங்கவும் ஆய்வுக் கூடக் கட்டடங்களுக்கு உதவி மானியமாகவும் அளிக்கப்பட்டுள்ளன. 1974–75–ஆம் ஆண்டில் மேலும் 55 உயர் நிலைப் பள்ளிகளுக்கு இம்மானியம் வழங்கப் படும். மாநிலத்தில் உள்ள ஒவ்வொரு மாவட்டத்திலும் உயர்நிலைப் பள்ளிகளுக்குத் தேவையான எல்லா அறிவியல் கருவிகளும் கொண்டுள்ள 17 ஆய்வுக் கூட இயல் ஊர்திகள் இயங்குகின்றன. மேலும் 8 ஊர்தி வண்டிகள் 1975–76–ம் ஆண்டில் வாங்கப்படும்.

நடுநிலைப் பள்ளி மாணவர்களுக்கு அவசியமான முறையில் விளக்கம் அளிக்கும் பொருட்டு சில அறிவியல் சாதனங்கள் வாங்குவதற்காக தொடக்கப்பள்ளிகள் ஒவ்வொன்றிற்கும் ரூ. 1,000 வழங்குவது என்ற அடிப்படையில் அறிவியல் சாதனங்களும் ஏனைய கல்விச் சாதனங்களும் வழங்கும் திட்டம் 1960-ல் தொடங்கப்பட்டது. இதுவரை இத்திட்டத்தின் கீழ் 11,400 தொடக்கப்பள்ளிகளும் 3,000 உயர் தொடக்கப்பள்ளிகளும் பயன் அடைந்துள்ளன. 1975–76–ஆம் ஆண்டிலும் இத்திட்டத்தின் கீழ் 1,220 தொடக்கப்பள்ளிகளும் 334 உயர்தொடக்கப்பள்ளிகளும் பயன் பெறும்.

நொய்யல் நீர்த் தேக்கத் திட்டம்.

*584 வினா— திரு. என். கிட்டப்பா : மாண்புமிகு பொதுப்பணித் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

கரூர் தாலுக்காவில் நொய்யல் நீர்த்தேக்கத் திட்டம் ஏற்படுத்தும் செயற் குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : இத் திட்டத்திற்கான விரிவான ஆய்வு தலைப் பொறியாளர்களால் நடத்தப்பட்டு வருகிறது.

Silt excluder in Grand Anicut.

* 585 *Q.*—THIRU G. ILANGOVAN : Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(*a*) whether there is any proposal with the Government to put up a silt excluder at the head reach of Grand Anicut channel ; and

(*b*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : (அ) & (இ) நீரியல்-நீர்ப் பண்பியல், பூண்டி நிறுதனத்தில் மாதிரி ஆய்வுகள் செய்யப்பட்டு வருகின்றன.

திரு. பெ. சீனிவாசன் : தமிழ் நாட்டில் இருக்கிற ஏரிகளில் இன்னும் சில்ட் கிளியரன்ஸ் தொடங்கப்படவில்லை. அரசாங்கம் இதற்கு உடனடியாக ஏற்பாடு செய்யுமா ?

1975 ஏப்ரல் 8]

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கேள்வி, பூண்டி நிறுவனத்தில் உள்ள ஆய்வுகள் பற்றியது. வறட்சிப் பணிகளின் கீழ் அந்த ஏரிகளில் சில கிளியரன்ஸ் செய்யப்படும் என்று கூறிக்கொள்கிறேன்.

திரு. கு. காமாட்சி : தலைவரவர்களே, ஜி. ஏ. கணலில் வண்டல் படிந்து விடுவதன் காரணமாக ஆண்டு தோறும் பல லட்சம் ரூபாய்செலவு செய்ய வேண்டியிருக்கிறது. அந்த "ஹெட் ஸ்லூயிஸ்" அமைந்திருக்கிற இடத்தின் காரணமாகத்தான் வண்டல் படிகிறது என்று பொறியியல் வல்லுநர்கள் சொல்கிறார்கள். ஆகவே, அந்த "ஹெட் ஸ்லூஸினை" கொஞ்சம் முன்னால் அமைக்கும் திட்டம் இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, அங்கத்தினர் அவர்கள் கருதுவதைப்போல் "ஹெட்ஸ்லூயிஸை" மாற்றியமைக்கும் திட்டம் இல்லை. வண்டல் படியாமல் எப்படி நீரோடு அடித்துச் செல்லச் செய்யலாம் என்பது பற்றி ஆராய்ச்சி நடக்கிறது. ஆராய்ச்சி பற்றிய அறிக்கை வந்தபின்னால் மேற்கொண்டு என்ன செய்யலாம் என்று பரிசீலனை செய்யப்படும்.

Rajaji Memorial, Guindy.

* 586 *Q.*—THIRU N. DENNIS :
THIRU N. K. PALANISAMY } : Will the Hon. the Minister for Public Works be pleased to state the progress of works so far made at the Rajaji Memorial in Guindy, Madras ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : கிண்டி, ராஜாஜி நினைவாலயம் கட்டுவது தொடர்பான பணி முடிவடைந்து விட்டது.

திரு. என். டென்னிஸ் : தலைவரவர்களே, இதன் மொத்தச் செலவு எவ்வளவு என்பதை அறிவிக்க இயலுமா ? அதோடு இராஜாஜியின் நினைவு மண்டபத்தில் வேறு சில அரசியல் தலைவர்களின் படமும் பெயிண்ட் செய்து வைக்கப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அப்படி யார் யாருடைய படங்கள் தேசியத் தலைவர்கள் என்ற முறையில் அங்கே இடம் பெற்றிருக்கின்றன என்பதை அறிவிப்பார்களா ?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : தலைவரவர்களே, இதற்காக அரசு 6 லட்சம் ரூபாய் சாங்ஷன் செய்தது. உள்ளே எந்தெந்த படங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன என்று கேட்டார்கள். மூதறிஞர் இராஜாஜி அவர்களுடன் நெருங்கிய தொடர்பு கொண்டவர்கள் என்ற முறையில் கூட அல்ல ; அவர்களுடைய வாழ்க்கையில் ஏற்பட்ட முக்கியமான சம்பவங்களைக் குறிக்கும் படங்களை வைத்திருக்கிறோம். தனிப்பட்ட யாருடைய படமும் அல்ல.

திரு. என். கே. பழனிசாமி : சார், மெயின்டனென்ஸ் செய்வதற்கு என்ன ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறத்து ?